**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.**

**அ.வ.எண்.118/2018**

2025–ம் வருடம் அக்டோபர் திங்கள் 10–ம் நாளன்று 73 வது பிரதிவாதி தரப்பு சாட்சியாக **பி.வா.சா.15**–வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| **பெயர்.** | : | **ராமசாமி** | **தொழில்** | : |
| **த/பெ.** | : | | **வட்டம்** | : |
| **முகவரி** | : | | **மதம்** | : |
| **ஜாதி** | : | | **வயது** | : |

**<u>முதல் விசாரணை:</u>–**

நான் இவ்வழக்கில் 73 வது பிரதிவாதி தாரகேஸ்வரியின் கணவரின் ஆவேன். என் மனைவி தாரகேஸ்வரி சார்பில் நான் சாட்சியம் அளிக்கிறேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். 73 வது பிரதிவாதி தாரகேஸ்வரியின் கணவர் ஆதார் அட்டை நகல் பி.வா.சா.ஆ.83 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 73 வது பிரதிவாதி தாரகேஸ்வரியின் ஆதார் அட்டை நகல் பி.வா.சா.ஆ.84 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 18.11.2008 ஆம் தேதிய 73 வது பிரதிவாதி தாரகேஸ்வரியின் பெயரிலான கிரைய ஆவணம் எண்.7084/2008 சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.85 சொத்தின் வில்லங்க சான்றிதழ் கணிணி நகல் பி.வா.சா.ஆ.86 ஆட்சேபனையுடன் குறியீடு

செய்யப்படுகிறது. (வில்லங்க சான்றிதழ் முழுமையாக இல்லாததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) 73 வது பிரதிவாதி தாரகேஸ்வரி பெயரிலான தனிபட்டா எண்.1336 கணிணி நகல் பி.வா.சா.ஆ.87 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>1 முதல் 6, 8 முதல் 15, 18, 19, 21 முதல் 40, 42 முதல் 46, 48 முதல் 62, 64, 65, 67, 68, 69, 70 முதல் 72, 74 முதல் 87, 89 முதல் 98, 100, 102, 104 முதல் 107, 114, 115 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

துமபிவாடி கிராமத்தில் எனக்கும் என் குடும்பத்தாருக்கும் பூர்வீக வகையில் எந்த சொத்துக்களும் இல்லை. எனது சொந்த ஊர் பரமத்தி வேலூர். மேற்சொன்ன என் சொந்த ஊரிலிருந்து தும்பிவாடி கிராமம் சுமார் 20, 25 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். நான் தற்போது திருப்பூர் மாவட்டத்தில் வசித்து வருகிறேன். தும்பிவாடி கிராமத்தில் எனக்கு விவசாய நிலங்கள் இல்லை. பி.வா.சா.ஆ.85 கிரையபத்திரத்தை பி.வா.சா.ஆ.8–ன் அடிப்படையில் எழுதிக்கொடுத்த ரவிச்சந்திரனுக்கே அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களில் உரிமையில்லை என்றும் ஆகையால் பி.வா.சா.ஆ.85 ன் கீழ் உங்களுக்கு கிரையம் எழுதிக்கொடுப்பதற்கு ரவிச்சந்திரனுக்கு சட்டப்படி உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல ராமச்சந்திரா மிஷன் தான் தாவா சொத்தை வாங்கியுள்ளது. அதில் ரவிச்சந்திரன் பொறுப்பில் இருந்தார். அவர் ராமச்சந்திரா மிஷன் அவருக்கு அதிகாரம் வழங்கியதன் பேரில் அவர் என் மனைவியிடம் சொத்தை விற்றுள்ளார். 106 நபர்கள் கிரையம்

பெற்றதற்காக நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. என் மனைவி வாங்கிய பி.வா.சா.ஆ.85 கிரைய ஆவணத்தில் நான் சாட்சியாக கையொப்பம் செய்யவில்லை.

**ஒம்/.K.H.இளவழகன்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.